**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 217/2023 P.W.9/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயச்சந்திரன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 28.05.2025**

**அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் இன்று ஆஜரில்லை என்பதால் சாட்சியை வழக்கின் தன்மைக் கருதியும் நீதியின் நலன் கருதியும் நிலையப்பொறுப்பு அதிகாரியின் முன்னிலையில் சாட்சியம் பதிவுச் செய்யப்படுகிறது.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் காணொலி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

1. நான் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 14.05.2022 ம் தேதி கருங்கல் காவல் ஆய்வாளராக பணியில் ( கூடுதல் பொறுப்பாக) குளச்சல் காவல் ஆய்வாளராக இருந்த நிலையில் 14.05.2022 ம் தேதி குளச்சல் காவல்நிலைய குற்ற எண் 138/222, சட்டப்பிரிவுகள் 364, 294(பி) 354 பி, 506 பத்தி இரண்டு இ.தச. 1860 வழக்கினை உதவி ஆய்வாளர் மோகன் ஜோஸ்லி பதிவுச்செய்து எனது விசாரணைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. அன்றையதினம் 11.45 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் பாலகிருஷ்ணன், ஐயப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன்.

3. பின்னர் சாட்சிகள் தங்கலீலா, றோஸ்லி, ஜெபகிருபா, உதவி ஆய்வாளர் மோகன் ஜோஸ்லி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர் சம்பவம் உண்மை என புலனாகியதால் வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவைத் தேடி வந்த நிலையில் 14.00 மணிக்கு இரும்பிலி சந்திப்பில் வைத்து இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவை பிடித்து விசாரிக்க அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவரை 14.15 மணிக்கு

கைதுசெய்து சாட்சிகள் ஜெகன் மற்றும் ஜெயன் ஆகியோர்கள் முன்பாக குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவாவை விசாரித்தேன்.

4. அவர் எந்தவித தூண்டுதலும் இன்றி தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுச் செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சம்பவத்தின் போது பயன்படுத்தி கத்தியை ஆஜர் செய்வதாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கொடுத்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யபடுகிறது. அதற்கான படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆகும். தடயப்பொருள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்பு சாட்சிகள் ஜெகன் மற்றும் ஜெயின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மற்றும் சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து தகுந்த வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு எனது புலன்விசாரணை முடித்து மேல்விசாரணைக்காக குளச்சல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

**குறுக்கு விசாரணை** :

வழக்கு சம்பவத்தில் பாதிப்படைந்த ஒரு நபர் முன்கூட்டியே பாதிப்பு ஏற்படுத்திய நபரை தெரிந்திருந்தால் மட்டுமே நன்கு தெரிந்த நபர் என்று கூற இயலும் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகள் றோஸ்லி, ஜெபகிருபா ஆகியோர்களின் உறவு முறை எனது விசாரணையில் துலங்கியதா என்றால் இல்லை. அ.சா1 தங்க லீலா எனது விசாரணையில் அ.சா2 றோஸ்லி மற்றும் அ.சா3 ஜெப கிருபா ஆகியோர்களை 3 வது நபர் போல் தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதுபோலவே மேற்படி அ.சா2, 3 ம் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

2. எனது விசாரணையில் றோஸ்லி, ஜெபகிருபாவும் காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க உடன் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மாறாக எனது விசாரணையில் அ.சா1 தங்கலீலா தனியாக தான் புகார் கொடுக்க வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதையே தான் அ.சா. 2, 3 ம் சொன்னார்கள் என்றால் சரிதான்.

3. நான் சம்பவயிடத்திற்கு 11.45 மணிக்கு பார்வையிடச் சென்றேன். நான் பார்வையிடச் சென்றபோது அ.சா1 தங்கலீலா என்னுடன் வந்தார்களா என்றால் இல்லை. எனக்கு சம்பவயிடத்தை யார்காட்டி தந்தார்கள் என்றால் யாரும் காட்டிக்கொடுக்கவில்லை, நானாக தான் சென்றேன். எனது விசாரணையில் சம்பவயிடம் பாம்புரி வாக்கால்பகுதியில் உள்ள வெள்ளியாகுளம் அருகிலிருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி சம்பவயிடத்திற்கு அருகில் உப்பளம் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. குளத்திற்கும் மேற்படி சம்பவயிடத்திற்கும் இடையே எத்தனை கி.மீ இருக்கும் என்றால் தெரியாது. நான் விசாரிக்கும்போது அ.சா1 தங்கலீலாவிற்கு காயம் இல்லை என்றால் சரிதான். அ.சா1 தங்கலீலாவின் ஆடைகள் எதுவும் கிழிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. நான் சம்பவயிடத்தை சரியாக விசாரிக்காமல் உண்மைக்கு மாறாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பதிவுச் செய்யப்பட்ட வழக்கில் நான் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவயிடமாக அ.சா1 தங்கலீலா கூறிய இடத்திற்கும் நான் ஆய்வு செய்த இடத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரை வழக்கில் உட்படுத்த வேண்டுமென்பதற்காக உண்மைக்கு மாறாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.